ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1617/16 - 2009 සැප්තැම්බර් 01 වැනි අඟහරුවාදා - 2009.09.01
*1617/16 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி.- 11/80* III.

### 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு மதியுரைக்குழுவின் கலந்துரையாடலுடன் சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*நிமல் சிரிபால த சில்வா,*
*சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சர்.*

கொழும்பு,
*2009, யூலை 28.*

**ஒழுங்குவிதிகள்**

*1.* இவ்வொழுங்குவிதிகள் 2009 ஆம் ஆண்டின் உணவு (ஒக்சிடன்ட் எதிரிகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டலாம் என்பதுடன், 2010 ஆம் ஆண்டு மார்ச்சு 01 ஆந் திகதியிலிருந்து பயனுற நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*2.* எவரேனும் ஆள் மனித நுகர்வுக்கென முன்னெடுக்கப்படுகின்ற ஏதேனும் உணவில் இதற்கான I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஒக்சிடன்ட் எதிரிகள் தவிர்ந்த வேறு ஏதேனும் ஒக்சிடன்ட் எதிரிகளை இறக்குமதி செய்தலோ, பயன்படுத்தலோ அல்லது பயன்படுத்தும் நோக்கத்திற்காக அவற்றை விளம்பரப்படுத்தலோ ஆகாது.

*3.* எவரேனும் ஆள், இவ் ஒழுங்குவிதிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டவை தவிர்ந்த, ஏதேனும் ஒக்சிடன்ட் எதிரியை எவ் உணவு கொண்டிருக்கக்கூடியதோ அவ்வுணவை உற்பத்தி செய்தலோ, இறக்குமதி செய்தலோ, விற்பனை செய்தலோ, விற்பனைக்காக முனைதலோ, களஞ்சியப்படுத்தலோ, விநியோகித்தலோ பயன்படுத்தலோ அல்லது விளம்பரப்படுத்தலோ ஆகாது.

*4.* (இதனகத்துப்பின்னர் " குறித்துரைக்கப்பட்ட உணவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இதற்கான 1 ஆம் அட்டவணையின் II ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் உணவு (இதனகத்துப்பின்னர் "அனுமதிக்கப்பட்ட ஒக்சிடன்ட்எதிரி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதன் I ஆம் நிரையின் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட ஒக்சிடன்ட் எதிரியையும் அதன் III ஆம் நிரையின் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் அதனுள் அல்லது அதன்மேல் கொண்டிருக்கலாம் ;

ஆயின் எவ்வாறாயினும், குழந்தைகள் மற்றும் இளம் பிள்ளைகளுக்காக முன்னப்படுகின்ற உணவெதுவும் அதன் I ஆம் அட்டவணையின் I ஆம் நிரையில் 1, 2 மற்றும் 3 ஆம் தலைப்புகளில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஒக்சிடன்ட் எதிரியை அல்லது சேர்மானமொன்றை அதில் அல்லது அதன்மேல் கொண்டிருத்தலாகாது.

5. குறித்துரைக்கப்பட்ட எந்த உணவு தொடர்பில் அனுமதிக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒக்சிடன்ட்எதிரிகள் இதற்கான I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்படுகின்றதோ அந்த ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட உணவு, அந்த அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு, எந்த உணவுக்கு தோதான அந்த ஒக்சிடன்ட்எதிரியின் அதிகபட்ச தொகையின் நூற்றுவீதமொன்றாக அத்தகைய உணவிலுள்ள அத்தகைய ஒக்சிடன்ட்எதிரி ஒவ்வொன்றினதும் தொகை வெளிப்படுத்தப்பட்டுள்ளபோது அந்த நூற்றுவீதங்களின் மொத்த தொகை நூறை விஞ்சாதிருப்பின் மாத்திரம், அதில் அல்லது அதன்மீது அத்தகைய ஒக்சிடன்ட்எதிரியின் இணைப்பொன்றைக் கொண்டிருக்கலாம்.

6. இவ்வொழுங்குவிதிகளிலுள்ள எதுவும் -

(அ) ஏதேனும் அனுமதிக்கப்பட்ட ஒக்சிடன்ட்எதிரி

(i) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் கூட்டு உணவில் பயன்படுத்தப்படும் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட உணவில் பயன்படுத்தப்படுமாயின் ;

(ii) பயன்படுத்தப்படும் குறித்துரைக்கப்பட்ட உணவின் தொகை தொடர்பில் I ஆம் அட்டவணையின் III ஆம் நிரையிலுள்ள அந்த குறித்துரைக்கப்பட்ட உணவு தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட விகிதாசாரத்தைவிட அதிகமாக அல்லாமல் கூட்டு உணவில் காணப்படின்,

ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குறித்துரைக்கப்பட்ட உணவுகளைப் பயன்படுத்துவதன் மூலம் அவ்வுணவுத் தயாரிப்பில் கலந்துவிடப்பட்ட ஏதேனும் அனுமதிக்கப்படும் ஒக்சிடன்ட்எதிரிகூட்டுணவில் இருப்பதைத்,

(ஆ) கூட்டுணவு ஒரு குறித்துரைக்கப்பட்ட உணவாயின் அத்துடன் I ஆம் அட்டவணையின் I ஆம் நிரையில் அது தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் அனுமதிக்கப்பட்ட ஒக்சிடன்ட்எதிரியை அது தொடர்பில் குறித்துரைக்கப்பட்டதைவிட ஏதேனும் கூடுதலான விகிதாசாரத்தில் கொண்டிராவிடில் ஏதேனும் கூட்டுணவில் இருப்பதைத்,

தடை செய்தலாகாது.

7. ஆளெவரும் அட்டவணை II இன் (1) ஆம் மற்றும் (2) ஆம் பந்திகளில் உள்ளடக்கியுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க கொள்கலனொன்று சுட்டுத்துண்டொன்றை கொண்டிருந்தாலன்றி உணவு தயாரிப்பில் ஆக்கக்கூறொன்றாக பயன்படுத்துவதற்காக (எந்த ஒட்சிடன்ட்எதிரி அடங்கலாக) ஏதேனும் அனுமதிக்கப்பட்ட ஒக்சிடன்ட் எதிரியை பயன்படுத்தலோ விளம்பரப்படுத்தலோ ஆகாது.

8. அத்தகைய ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறான எவ் உணவுக்கு அனுமதிக்கப்பட்ட ஒக்சிடன்ட்எதிரி சேர்க்கப்பட்டுள்ளதோ அந்த உணவின் கொள்கலன் அல்லது சிப்பம் ஒவ்வொன்றிலும் 2005 ஆம் ஆண்டின் சனவரி 19 ஆந் திகதிய 1376/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உணவு (சுட்டுத்துண்டிடல் மற்றும் விளம்பரப்படுத்தல்) ஒழுங்குவிதிகள்–2005 இல் தரப்பட்டுள்ளவாறான வெளிப்படுத்துகை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

9. இவ் ஒழுங்குவிதிகளில் -

"ஒக்சிடன்ட்எதிரி" என்பது உணவில் சேர்மவுயிரகவாக்கம் காரணமாக, கெட்டுப்போன அல்லது வேறு தரங்குன்றிய சுவை ஏற்படுவதை காலந்தாழ்த்துகின்ற தாமதப்படுத்துகின்ற அல்லது தடுக்கின்ற ஏதேனும் பதார்த்தம் என்று பொருள்படும் என்பதுடன் லெசிதின், அஸ்கோபிக் அமிலம் அல்லது அதன் உப்புக்கள் ஊட்டச்சத்து வகைகள், சித்திரிக் அமிலம் அல்லது பொஸ்பேரிக் அமிலம் என்பவற்றை உள்ளடக்காது ;

"குழந்தைகள்" என்பது 12 மாதங்களுக்குக் குறைவான வயதினையுடைய பிள்ளைகள் என்று பொருள்படும் ;

"இளம் பிள்ளைகள்" என்பது ஒரு வயதிற்கும் மூன்று வயதிற்கும் உட்பட்ட வயதினையுடைய பிள்ளைகள் என்று பொருள்படும்.

அட்டவணை I

குறித்துரைக்கப்பட்ட உணவிற்கு சேர்க்கப்படக்கூடிய அனுமதிக்கப்பட்ட ஒக்சிடன்ட் எதிரியும் ஒவ்வொரு விடயத்திலும் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச விகிதாசாரமும்.

| நிரல் I | | நிரல் II | நிரல் III |
|---|---|---|---|
| **ஒக்சிடன்ட்எதிரி** | **ஐ. என். எஸ். இல.** | **குறித்துரைக்கப்பட்ட உணவு** | **உணவின் கிலோ கிராம் ஒன்றிற்கான அதிகபட்ச விகிதாசாரம் மில்லி கிராமில்** |
| 1. புறோபைல் கலேற்று ஒக்றைல் கலேற்று டொடி சைல் கலேற்று அல்லது அவற்றின் கலவைகள் | 310 311 312 | (அ) உண்ணக்கூடிய கொழுப்புகள் மற்றும் எண்ணெய்கள் செயற்கை வெண்ணெய், விருந்துணவிலுள்ள கொழுப்பு, சலாது, எண்ணெய் கள், பன்றிக் கொழுப்பு மற்றும் வடிநெய் | 100 |
| | | (ஆ) இன்றியமையாத எண் ணெய்கள் | 1000 |
| 2. பியிலேரெற் கைறோக்ஸ்யவிசோல் (பிஎச்ஏ) | 320 | (அ) உண்ணக்கூடிய கொழுப்புகள் மற்றும் எண்ணெய்கள்,செயற்கை வெண்ணெய், விருந்துணவிலுள்ள கொழுப்பு, சலாது, எண் ணெய்கள், பன்றிக் கொழுப்பு மற்றும் வடி நெய் | 200 |
| | | (ஆ) இன்றியமையாத எண் ணெய்கள் | 1000 |
| 3. ரேர்ட் பியூதைல் கைறோகு யினேன் (ரிபிஎச்கியூ) | 319 | (அ) உண்ணக்கூடிய கொழுப்புகள் மற்றும் எண்ணெய்கள்,செயற்கை வெண்ணெய், விருந்துணவி லுள்ள கொழுப்பு, சலாது, எண் ணெய்கள், பன்றிக் கொழுப்பு மற்றும் வடிநெய் | 200 |
| | | (ஆ) இன்றியமையாத எண் ணெய்கள் | 1000 |
| 4. அஸ்கோபைல் பல்மி ரேற்று ஸ்ரியரேற்று | 304 305 | (அ) உண்ணக்கூடிய கொழுப்புகள் மற்றும் எண்ணெய்கள், செயற்கை வெண்ணெய், விருந் துணவிலுள்ள கொழுப்பு, சலாது, எண்ணெய்கள், பன்றிக் கொழுப்பு மற்றும் வடிநெய் | ம. தி. உ. (ஜிஎம்பி) ஆல் ஒழுங்குபடுத்தப்பட்டது. |
| | | (ஆ) இன்றியமையாத எண்ணெய்கள் | |

அட்டவணை 11

(1) உபவிதி 7 இற்கு உரித்துள்ள ஒவ்வொரு கொள்கலனும் சுட்டுத்துண்டு ஒன்றைக் கொண்டிருத்தலோடு அதன்மீது பின்வரும் கூற்றுக்களையும் கொண்டிருத்தல் வேண்டும் :

(அ) ஒவ்வொரு அனுமதிக்கப்பட்ட ஒக்சிடன்ட்எதிரியினதும் பொதுவான அல்லது வழமையான பெயர் அத்துடன் தோதான ஐஎன்எஸ் இலக்கம் மற்றும் கொள்கலன் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் ஒக்சிடன்ட்எதிரி ஒவ்வொன்றினதும் நூற்றுவீதம் ;

(ஆ) தயாரிப்பின்போது வேறு ஏதேனும் பதார்த்தம் பயன்படுத்தப்படுகின்றபோது, ஏதேனும் அத்தகைய பதார்த்தங்களின் பொதுவான அல்லது வழமையான அல்லது தோதான ஐஎன்எஸ் இலக்கம் ஒன்று ; அத்துடன்

(இ) இரண்டு அல்லது மேற்பட்ட அத்தகைய பதார்த்தங்கள் பயன்படுத்தப்படுமாயின், அனுமதிக்கப்பட்ட ஒக்சிடன்ட்எதிரி ஒவ்வொன்றினதும், மற்றும் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் வேறு பதார்த்தங்கள் ஒவ்வொன்றினதும் விகிதாசாரம்.

(2) முதலாம் உட்பந்தியின் நிபந்தனைகளுக்கிணங்க வெளியிடுவதற்குத் தேவைப்படுகின்ற ஏதேனும் கூற்றுக்கள்.

(அ) தெளிவானதாகவும் தகுதியானதாகவும் இருத்தல் வெண்டும் ;

(ஆ) சாதாரண கொள்வனவு நிபந்தனைகளின்கீழ் எதிர்கால வாய்ப்புகளை எதிர்நோக்கும் கொள்வனவாளரொருவரால் அந்தக்கூற்றுகளை இலகுவில் வாசித்து விளங்கிக்கொள்ளக்கூடிய அத்தகைய முறையில் கொள்கலனிற்கு எந்த முகவரிச்சீட்டு பாதுகாப்பாக இணைக்கப்படவேண்டுமோ அம்முகவரிச்சீட்டின் மீது துலாம்பரமான இடத்தில் இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) ஏதேனும் வேறு விடயங்களால் ஏதேனும் வகையில் இரகசியமானதாகவோ அல்லது தெளிவற்றதாகவோ இருத்தலாகாது.

வழங்கலின்மையாக்கல் :

1993 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி வெளியிடப்பட்ட இல. 788/7 அதிவிசேட அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட உணவு (சுட்டுத்துண்டிடுதலும் நானாவித) - 1993 உபவிதிகளின் III ஆம் பிரிவின் கீழ் உள்ள உபவிதிகள் 27 ஆம், 28 ஆம் ஐந்தாம் அட்டவணையும் வழங்கப்படவல்லாததாக்கப்படுகிறது.

9- 588

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.